**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 22.08.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 13

2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. அசோக சக்கரவர்த்தி என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசோக சக்கரவர்த்தி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர். )

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது சென்னை தாம்பரம் மாநகர காவல் பள்ளிக்கரணை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் உச்சிப்புளி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 19.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த பொழுது இருட்டூரணி கிராமத்தைசேர்ந்த ராணி

கணவர் பெயர் காளிமுத்து என்பவர், நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று, உச்சிப்புளி காவல் நிலைய குற்ற எண்.113/2023, பிரிவுகள் 174Crpc ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ராணி என்பவர் என்னிடம் கொடுத்த புகார் மனு தற்பொழுது என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த புகார் மனு அ.த.சா.ஆ.9 ஆகும். அதன் அடிப்படையில் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.10 ஆகும். உடனடியாக மேல்விசாரணைக்காக புகார்மனுவினையும், முதல் தகவல் அறிக்கையினையும் காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் ஏற்கனவே வேறொரு புகார் கொடுக்கப்பட்டு அது மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போன்று சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் ராணி புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பின்யோசனை செய்து புகார் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .